## கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்

## அசல் வழக்கு எண். 186/2013

நாள்: 15.06.2026.

பெயர்: அருண்ராஜ் (பி.வா.சா.1) த/பெ: ராகவன்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை...</u>

1) தாவா சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் ஜெயங்கொண்டத்தில் உள்ளது. நான் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் ஜெயங்கொண்டத்தில் தான் குடியிருந்து வருகிறேன். எனக்கும், மற்ற பிரதிவாதிகளுக்கும் கட்சி ஒன்று தான் என்றால் எனக்கும், 2, 3, 5, 6 பிரதிவாதிகளுக்கும் ஒரே கட்சி தான் 7, 8 பிரதிவாதிகள் தனியாக வழக்கு நடத்திவருகின்றனர். 7, 8 பிரதிவாதிகள் இவ்வழக்கில் என்ன கட்சி நடத்தி வருகின்றனர் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதி எத்தனை அயிட்ட சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் 5 அயிட்ட சொத்துக்களுக்கு தாக்கல் செய்துள்ளார், அதன் சர்வே எண்கள் மற்றும் விஸ்தீரணம் என்ன என்றால் 371/10C ல் 86 செண்ட், 374/1B2 ல் விஸ்தீரனம் தெரியவில்லை, 374/4 ல் விஸ்தீரணம் தெரியவில்லை, இதர சர்வே எண்கள் சரியாக தெரியவில்லை.

2) தாவா சொத்துக்கள் எனது தந்தை கிரையம் வாங்கிய சொத்துக்கள் என்றால் சரிதான். எனது தந்தை எப்போது கிரையம் வாங்கினார் என்றால் 1988 ல் அன்பழகன் மற்றும் பன்னீர்செல்வம், மைனர் மதியழகன் ஆகியோரிடமிருந்தும், 2004 ல் ரெங்கசாமி என்பவரிடமிருந்தும், கிரையம் பெற்றார். மேற்படி கிரைய சொத்துக்களின் விஸ்தீரணம் என்ன என்றால் சரியாக தெரியவில்லை. எனது தந்தை எப்போது இறந்தார் என்றால் 24.12.2011 தேதியில் இறந்தார். எனது தந்தை 1988 ல் கிரையம் பெற்ற போது எனக்கு என்ன வயது என்றால் 2 ஆகும். தற்போது எனக்கு வயது என்ன என்றால் 40

ஆகும். எனது தந்தை 2004 ல் கிரையம் பெற்ற போது எனக்கு என்ன வயது என்றால் 18 ஆகும்.

**(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)**

ஒப்பம்/ரா.அருண்ராஜ்/

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி, என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/ம.சி. கண்ணதாசன்/
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.